Puducherry

Regional Bulletin

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 28.3.2024 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

தமிழகம் உட்பட 17 மாநிலங்கள், புதுச்சேரி உட்பட 4 யூனியன் பிரதேசங்களில், முதல் கட்டத் தேர்தல் நடைபெறும், 102 மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பு மனுக்களின் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானத் திட்டங்கள் காலநிலைக்கு உகந்ததாகவும், எரிசக்தியை சிக்கனமாக பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்படுவது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

மக்களவைக்கு ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கி உள்ளது.

டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால் கைது குறித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை சமீபத்தில் தெரிவித்த கருத்து தேவையற்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***வேட்பு மனுக்கள் பரிசீலனை -1 (18)***

தமிழகம் உட்பட 17 மாநிலங்கள், புதுச்சேரி உட்பட 4 யூனியன் பிரதேசங்களில், 102 மக்களவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 19ஆம்

தேதி நடைபெற உள்ள முதற்கட்ட வாக்குப்பதிவுக்கு, தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களின் பரிசீலனை இன்று நடைபெற்றது.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் 34 வேட்பாளர்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது, இன்று பரிசீலனை நடைபெற்றது. இதில், 27 வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 7 வேட்பாளர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக, மாவட்ட ஆட்சியரும் – தேர்தல் நடத்தும் அதிகாரியுமான திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுக்களை திரும்பப்பெற கடைசி நாள் வரும் 30ஆம் தேதி என்றும், அன்றைய தினமே, வேட்பாளர்களுக்கான சின்னங்கள் ஒதுக்கப்பட்டு, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 967 வாக்குச்சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன என்றும், மொத்தம் 10 லட்சத்து 23 ஆயிரத்து 699 வாக்காளர்கள் உள்ளனர் என்றும் அவர் கூறினார். இதில் ஆண் வாக்காளர்கள் 4 லட்சத்து 80 ஆயிரத்து 569. பெண் வாக்காளர்கள் 5 லட்சத்து 42 ஆயிரத்து 973, 3ஆம் பாலினத்தவர் 151 பேர் உள்ளனர்.

***வேட்பு மனுக்கள் பரிசீலனை -2 (3)***

தமிழகத்தில் உள்ள 39 மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்புமனுக்கள் பரிசிலீக்கப்பட்டதில், பெரும்பாலான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

*திரவுபதி முர்மு -1 (17)*

உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானத் திட்டங்கள் காலநிலைக்கு உகந்ததாகவும், எரிசக்தியை சிக்கனமாக பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்படுவது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

இன்று, குடியரசுத் தலைவர் மாளிகையில், மத்திய பொதுப்பணித் துறையின் உதவிப் பொறியாளர்கள் இடையே உரையாற்றிய அவர், கட்டிடங்கள், சாலைகள், மற்றும், இதர உள் கட்டமைப்புகள் நிலையானதாகவும், எரிசக்தியை குறைந்த அளவில் பயன்படுத்தக் கூடியதாகவும், சுற்றுச் சூழலுக்கு உகந்ததாகவும் இருக்கும் வகையில் திட்டமிட வேண்டும் என்றார்.

வளர்ந்து வரும் சவால்களை திறம்பட சமாளிக்கும் வகையில், பொறியாளர்கள் தங்களது அணுகுமுறையில் புதுமைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

இளம் பொறியாளர்கள் நவீன தொழில்நுட்பம் சார்ந்த தொலைநோக்கு அணுகுமுறையை பின்பற்றி செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்ட அவர், செயற்கை நுண்ணறிவு, ரோபோக்கள் போன்ற புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் வழக்கமான நடைமுறைகளை மாற்றத்திற்கு உட்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

*திரவுபதி முர்மு -2 (3)*

சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை கட்டுமானத் திட்டங்கள், காலத்தின் தேவை என்றும், எதிர்கால கட்டுமான முறைக்கான தொடக்கமாக உள்ளது என்றும், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறினார்.

*2ஆம் கட்ட வாக்குப்பதிவு (14)*

மக்களவைக்கு ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கி உள்ளது. இதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டது. 12 மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 89 மக்களவைத் தொகுதிகளுக்கு 2ஆம் கட்டத் தேர்தல் நடைபெற உள்ளது. கேரளாவில் 20 தொகுதிகளுக்கும், கர்நாடகத்தில் 14, ராஜஸ்தானில் 13, உத்தரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 8, மத்திய பிரதேசத்தில் 7, அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா 5, மேற்கு வங்கம் மற்றும் சத்தீஸ்கரில் தலா 3 தொகுதிகளுக்கும், மணிப்பூர், திரிபுரா, ஜம்மு – காஷ்மீரில் தலா 1 தொகுதிக்கும், 2ஆம் கட்டத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் செய்ய அடுத்த மாதம் 4ஆம் தேதி கடைசி நாளாகும். வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை 5ஆம் தேதி நடைபெற உள்ளது. ஜம்மு – காஷ்மீரில் மட்டும், ஏப்ரல் 6ஆம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

*குடியரசு துணைத் தலைவர் (10)*

நிலையான வளர்ச்சியை அடைவதற்கு பாலின சமத்துவமும், பெண்களுக்கான பொருளாதார அதிகாரமும், முக்கியமானது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பின் மகளிர் பிரிவின் 40ஆம் ஆண்டு விழாவில், கலந்து கொண்டு பேசிய அவர், பாலின சமத்துவமும், மகளிர் தலைமையிலான வளர்ச்சியும், முற்போக்கான சமூகத்தின் அடிப்படை கொள்கைகளாக உள்ளன என்றார். மகளிர் இட

ஒதுக்கீடு மசோதா பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் இதன் மூலம் சமூகத்தில் பெண்களுக்கு உரிய இடம் உறுதி செய்யப்படும் என்றும் திரு. ஜெக்தீப் தன்கர் தெரிவித்தார்.

***அமெரிக்கா கருத்து (20)***

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது குறித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை சமீபத்தில் தெரிவித்த கருத்து தேவையற்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. புதுடெல்லியில் இன்று பிற்பகல் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், இந்தியாவின் தேர்தல் மற்றும் சட்ட நடைமுறைகள் குறித்து இதுபோன்ற எந்தவொரு வெளிநாட்டின் குற்றச்சாட்டும், முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று கூறினார். அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்த கருத்து தொடர்பாக, நேற்று, அமெரிக்க தூதரகத்தின் மூத்த அதிகாரியிடம், இந்தியா, தனது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்ததோடு, எதிர்ப்பையும் பதிவு செய்ததாக தெரிவித்த அவர், இந்தியாவின் சட்ட நடைமுறைகள், சட்டத்தின் படியே மேற்கொள்ளப் படுவதாகக் கூறினார். இந்தியா தனது சுதந்திரமான மற்றும் வலுவான ஜனநாயக அமைப்புகள் குறித்து பெருமிதம் கொள்கிறது என்றும், எந்தவொரு தேவையற்ற அன்னிய தாக்குதல்களில் இருந்தும், அவற்றை பாதுகாக்க உறுதி பூண்டுள்ளதாகவும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார். பரஸ்பர மரியாதை மற்றும் புரிதல்கள் சர்வதேச உறவுகளின் அடித்தளத்தை உருவாக்குகிறது என்றும் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளின்

இறையாண்மை மற்றும் உள் விவகாரங்களை மதிக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

***மின்னணு வர்த்தகம் (6)***

மின்னணு வர்த்தகத்தை மேம்படுத்துவது தொடர்பாக இந்தியா, மலேசியா இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், மலேசியா அமைச்சர் திரு. கோவிந்த்சிங் தியோவுடன் நடத்திய பேச்சுக்கள் திருப்திகரமாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

***விழிப்புணர்வு வாசகம் -1 (18)***

புதுச்சேரி தலைமைத் தேர்தல் அலுவலர் அலுவலகமும், புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப் பிரிவும் இணைந்து, புதுச்சேரி மக்களவைத் தொகுதி வாக்காளர்களுக்கான, தேர்தல் விழிப்புணர்வு தமிழ் வாசகம் எழுதுதல் போட்டியை அறிவித்துள்ளன. முறையான வாக்காளர் கல்வி, மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான SVEEP இயக்கத்தின் கீழ் இப்போட்டி நடத்தப்படுகிறது.

வாக்காளர் கடமைகள், 100 சதவிகித வாக்களிப்பு, நேர்மையான தேர்தல், தேர்தல் ஆணையத்தின் மொபைல் செயலிகள், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் தேர்தலின் பங்கு, வாக்குச் சாவடி வசதிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி போன்ற கருத்துக்களை மையப்படுத்தி, தமிழில் விழிப்புணர்வு வாசகங்களை, வாக்காளர்கள் இப்போட்டிக்கு அனுப்பி

வைக்கலாம். எதுகை – மோனை - சந்தம் போன்ற அம்சங்களுடன், ஓசை நயத்துடனும், புதியதாகவும், புதுமையானதாகவும் வாசகங்கள் இருக்க வேண்டும்.

வாக்காளர்கள் தங்களின் பெயர், முகவரி, மற்றும் மொபைல் எண்ணுடன், அதிகபட்சம் 5 விழிப்புணர்வு வாசகங்களை, 94 43 30 83 76 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி மாலை 5 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும்

***விழிப்புணர்வு வாசகம் -2 (4)***

வாசகங்களுக்கு, முதல் பரிசாக ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாய், 2ஆம் பரிசாக இருவருக்கு தலா 2 ஆயிரம் ரூபாய், மற்றும் 3ஆம் பரிசாக மூவருக்கு தலா ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் வாசகங்கள், வாக்காளர் விழிப்புணர்வுக்காக அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப் படும்.

***தேர்தல் விழிப்புணர்வு (13)***

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முதல் முறை வாக்களிக்க உள்ள வாக்காளர்கள் ஆர்வமுடன் வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில், நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், புதுச்சேரியில், தேர்தல் துறை சார்பில் கல்லூரி மாணவ-மாணவர்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஏனாம் பகுதியில் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அரசு கலைக்கல்லூரி மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அரசு ஐடிஐ மாணவர்கள் இணைந்து வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். நேர்மையாகவும், 100

சதவிகிதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் நடைபெற்ற இப்பேரணியை ஏனாம் மண்டல் நிர்வாக அலுவலக கண்காணிப்பாளர் திரு. Pesala Namassivayah கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

***ஐ.நா உணவு (10)***

உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 105 கோடி மெட்ரிக் டன் உணவு வீணாக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐ.நா. வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், ஒவ்வொரு ஆண்டும், ஒரு தனிநபர் வீணாக்கும் உணவை கணக்கிட்டால், அது 79 கிலோவாக உள்ளது என்றும், வீடுகளில் 60 சதவிகிதமும், உணவகங்களில் 28 சதவிகிதமும், உணவுகள் வீணாக்கப்படுவதாக தெரிய வந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உலகளவில் உணவு வீணாக்கப்படுவதை பாதியாக குறைக்கும் வகையில் உலக நாடுகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

***எல்லைப் பேச்சு (9)***

இந்தியா – சீனா இடையேயான எல்லைப் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வு காணும் வகையில், இரு நாடுகளும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பெய்ஜிங்கில் நடைபெற்ற இது தொடர்பான ஒருங்கிணைப்பு செயல்முறை கூட்டத்தில், இரு நாடுகளும், ராணுவம் மற்றும் வெளியுறவு அமைச்சக நிலையிலான பேச்சுக்களை தொடர்ந்து மேற்கொள்வது என்றும் இதன் மூலம் எல்லைப் பிரச்சனைகளை சுமூகமாக தீர்த்துக் கொள்ள முயற்சி

மேற்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***Ph.D., (10)***

2024-25ஆம் கல்வி ஆண்டு முதல், Ph.D., படிப்பிற்கு, நெட் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில், மாணவர் சேர்க்கை மேற்கொள்ள வேண்டும் என பல்கலைக் கழக மானியக் குழுவான UGC அறிவித்துள்ளது. இது தொடர்பாக, பல்கலைக்கழக மானியக் குழுத்தலைவர் திரு. ஜகதீஷ்குமார் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ஒரு சில பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நுழைவுத் தேர்வு மூலம் Ph.D., மாணவர் சேர்க்கை மேற்கொள்வதாக தெரிவித்துள்ள அவர், இதற்குப் பதிலாக நெட் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலேயே, ஆராய்ச்சி படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

தமிழகம் உட்பட 17 மாநிலங்கள், புதுச்சேரி உட்பட 4 யூனியன் பிரதேசங்களில், முதல் கட்டத் தேர்தல் நடைபெறும், 102 மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பு மனுக்களின் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானத் திட்டங்கள் காலநிலைக்கு உகந்ததாகவும், எரிசக்தியை சிக்கனமாக பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்படுவது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

மக்களவைக்கு ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கி உள்ளது.

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது குறித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை சமீபத்தில் தெரிவித்த கருத்து தேவையற்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI / SM / RK